Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

ருத்ராவதி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி.கு. பத்மலதா,

ந.க.எண்.87/2024 நாள். 08.07.2024

பொருள் – மனைப்பிரிவு – திருப்பூர் மாவட்டம் – ருத்ராவதி பேரூராட்சி – குண்டடம் கிராமம் – க.ச. எண்கள்.1077/14A1, 1077/14A3, 1077/15A1 & 1077/15A3ல் 1.41 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள சாய் நகர் - Phase III குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது – நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை – 1.) திரு. ஆ.ஸ்ரீதர், எண்.1076/1A2, குண்டடம் என்பவரது விண்ணப்பம்.
2.) தாராபுரம் சார்பதிவாளர் அலுவலக தானபத்திரம் பத்திர ஆவண எண்.1069/2020 நாள்.12.02.2020.
3.) நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் அவர்களின் கடிதம் ROC No. Q2DYB809/2022/TCP, நாள்.12.10.2022.
4.) இப்பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி, நாள்.10.06.2024.

பார்வை 1ல் காணும் விண்ணப்பத்தாரர் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், ருத்ராவதி பேரூராட்சிக்குட்பட்ட குண்டடம் கிராமம் க.ச. எண்கள்.1077/14A1, 1077/14A3, 1077/15A1 & 1077/15A3ல் 1.41 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையவுள்ள சாய்நகர் Phase III குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

பார்வை 2ல் காணும் தாராபுரம் சார்பதிவாளர் அலுவலக தானபத்திரம் ஆவண பத்திரத்தின்படி மேற்படி மனைப்பிரிவில் இப்பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டிய சாலைகள், மூலைமுடுக்குகள் மற்றும் பூங்கா என மொத்தம் 798.71 ச.மீட்டர் உள்ள இடமும் மற்றும் மின்வாரியத்திற்கு 52.03 ச.மீட்டர் பரப்பளவுள்ள இடங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

பார்வை 3ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி குண்டடம் கிராமம் க.ச.எண்கள்.

1077/14A1, 1077/14A3, 1077/15A1 & 1077/15A3ல் 1.41 ஏக்கர் 1.63 ஏக்கர் இடத்தில் அமைய உள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/TIRUPPUR/LAYOUT No. 24ல் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை பார்வை 4ல் காணும் இப்பேரூராட்சி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவில் சாலைகள், குடிநீர் வசதி, கழிவு நீர், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகளை மனைப்பிரிவு உரிமையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும். பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய காலியிட வரி, இதர கட்டணங்கள் மற்றும் நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்த வேண்டிய நிலபயன்மாற்ற கட்டணம் அனைத்தும் மனைப்பிரிவு உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் ஆவணங்களின் அடிப்படையில் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், ருத்ராவதி பேரூராட்சிக்குட்பட்ட குண்டடம் கிராமம் க.ச.எண். 1077/14A1, 1077/14A3, 1077/15A1 & 1077/15A3ல் 1.41 ஏக்கர் இடத்தில் அமையும் சாய்நகர் Phase III (30 மனைகள்) மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் திருப்பூர் அவர்களது உத்தரவில் தெரிவித்துள்ளபடி 1 முதல் 16 முடிய உள்ள நிபந்தனைகள் மற்றும் 1 முதல் 7 முடிய உள்ள சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டும் கீழ்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டும் மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. நகர் ஊரமைப்பு துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளின் அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனைகளை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது என தெரிவிக்கப்படுகிறது.
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.
3. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடைகள், பண்டக சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு

செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்த வேண்டும்.

4. விரிவு அபிவிருத்தி திட்டப்பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்து வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையும் பயன்படுத்தக்கூடாது என தெரிவிக்கப்படுகிறது.

5. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர் (23 அடி) மற்றும் 9 மீட்டர் (30 அடி) அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.5 மீட்டரும் (5 அடியும்) 12 மீட்டருக்கு (40 அடிக்கு) மேல் மற்றும் 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 3 மீட்டரும் (10 அடியும்) 15 மீட்டர் (50 அடி), மேலும் 24 மீட்டர் (80 அடி) அகலம் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்டு சாலைகளுக்கு 6 மீட்டர் (20 அடி) என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். பேரூராட்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8 மீ (6 அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின் படி 2.4 மீ (8 அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர எந்தவித கட்டடமோ சுவரோ கட்டுதல் கூடாது என தெரிவிக்கப்படுகிறது.

6. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திற்கும் குறைந்தது 1.5 மீ அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீ திறந்வெளி விடப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

7. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3.00 மீட்டர் / 2.00 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

8. விரிவு அபிவிருத்தித் திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின் படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்படக்கூடாது. கட்டிடம் கட்டாமல் விடப்படும் திறந்த வெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாகவோ பராமரித்தல் வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

9. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்த வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

10. கடைக்கால் (Foundation) போடத் தேவையான் அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தல் கூடாது என தெரிவிக்கப்படுகிறது.

11. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

12. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

13. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

14. கோயில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம்/இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். இவைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

15. பூங்கா, சிறுவர் விளையாடுமிடம், திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

16. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுதான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகள் பத்திரங்களின் பகுதியாக சேர்த்துக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

17. தமிழ்நாடு நகர்புற நில உச்ச வரம்பு சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்ச வரம்பு சட்ட அதிகாரிக்கு தெரிவித்தல் வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

18. மனுதாரர் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிர்வாக அதிகாரியிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மானம் எண்ணும், நாளும், மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான

நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

19. மனுதாரர் சமர்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது .

20. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

21. ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவில் மனை வாங்கும் ஒவ்வொருக்கும் மனைப்பிரிவு வரைபட நகல் மனுதாரரால் வழங்கப்பட வேண்டும்.

8.7.2024

செயல் அலுவலர்
ருத்ராவதி பேரூராட்சி
திருப்பூர் மாவட்டம்.

8/7/2024

ருத்ராவதி பேரூராட்சி
குண்டடம் 638 702
திருப்பூர் மாவட்டம்

பெறுநர்
திரு. ஆ.ஸ்ரீதர்,
குண்டடம் - 638702
திருப்பூர் மாவட்டம்.

நகல்

நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

ருத்ராவதி பேரூராட்சி அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்

நாள்.08.07.2024

தலைவர் அவர்களின்முன் அனுமதி

நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் திருப்பூர் மாவட்டம் அவர்களது கடிதம் ROC No. Q2DVB809/2022/TCP நாள். 12.10.2022 திருப்பூர் மாவட்டம் ருத்ராவதி பேரூராட்சி குண்டடம் கிராமம் க.ச.எண். 1077/14A1, 1077/14A3, 1077/15A1, 1077/15A3ல், 1.41 ஏக்கர் (அ) 5710 சமீ பரப்பளவு இடத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அமைக்க தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் பெயர். திரு.ஆ.ஸ்ரீதர்

மனையின் பரப்பு : 1.41 ஏக்கர் (5710 சமீ)

ஒதுக்கப்பட்ட மனைகள்:30

ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு :44.67 சமீ

TANGEDCO ஒதுக்கப்பட்டது : 500.58சமீ

பேரூராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் ரூ.341279/–க்கான ICICI வங்கி வரைவோலை எண். 503195, நாள்.06.07.2024ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

கருவூலக வங்கி கணக்கில் மொத்த மதிப்பீட்டில் மார்க்கெட் மதிப்பில் 3.0% தொகை ரூ.310000/– உரிய கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு 1.41 ஏக்கரில் அமையவுள்ள குடியிருப்பு மனைக்கு (சாய்நகர்–III) அனுமதி வழங்க மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ருத்ராவதி பேரூராட்சி குண்டடம் 638 702 திருப்பூர் மாவட்டம்

(ஒம்). பா.கண்ணம்மாள்
தலைவர்
ருத்ராவதி பேரூராட்சி

(உண்மை நகல்)

8.7.2024
செயல் அலுவலர்
ருத்ராவதி பேரூராட்சி
திருப்பூர் மாவட்டம்
8/7/24

குடிநீரை வீணாக்காதீர், சிக்கனமாக பயன்படுத்துவீர்.

படிவ எண்: TPCF 1

ருத்திராவதி பேரூராட்சி (திருப்பூர் மாவட்டம்)

செலுத்துச்சீட்டு எண் **124/2024-25**

பணம் செலுத்துபவர் பிரதி

நாள் : 08.07.2024

பணம் செலுத்துபவரின் பெயர் / முகவரி

ஆ. ஸ்ரீதர்
த/பெ.ஆதிநாராயணன்
சாய் நகர்–3,
குண்டடம் – 638702

கணக்கு எண்	கணக்கு இன விபரம்	தொகை ரூ
1010	Vacant Land Tax	2,95,022.00
1045	Other Income	16,755.00
4043	Library Cess-Payable	29,502.00
எழுத்தால் ரூபாய்	Three Lakhs Fourty One Thousand Two Hundred Seventy Nine Rupees Only	**3,41,279.00**

குறிப்பு : க.ச.எண்.1077/14எ1, 1077/14எ3, 1077/16எ1,1077/15எ3ல் 1.41 ஏக்கர் சாய்நகர்–3 மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் கட்டணத்திற்கு வங்கி வரைவு பெறப்பட்டது.

பணம் விபரம் : வரைவோலை

503195/06.07.2024 - ICICI BANK

செலுத்துபவரின் கையொப்பம்

8/7/2024

செயல் அலுவலர்
ருத்திராவதி பேரூராட்சி
திருப்பூர் மாவட்டம்

இ.நி.உ/பொறுப்பாளர்

குறிப்பு :

1. வைப்புத் தொகை செலுத்துவோர் பின்னர் தொகையினைத் திரும்பப்பெற ஏதுவாக இதனைப் பத்திரப்படுத்தி தொகை பெற விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.
2. செலுத்துச் சீட்டில் உரிய அலுவலர் முழு கையெழுத்து இல்லை எனில் செல்லுபடியாகாது.

Payment subject to realization



நகர் ஊரமைப்பு துறை (DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

ருத்ராவதி பேரூராட்சி

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், ருத்ராவதி பேரூராட்சி, குண்டடம் கிராமம் க.ச.எண்: 1077/14A1, 1077/14A3, 1077/15A1 & 1077/15A3 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:400

இணையதள விண்ணப்பம் எண்: [illegible], நாள்.03.12.2022

குறிப்பு:-

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 1.41 ஏக்கர் (அ) 5710.00ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 30

மனைப்பிரிவின் எல்லை :

நிலையிலுள்ள சாலை :

பொது ஒதுக்கீடுகள் : (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

I. மனைப்பிரிவு சாலை :754.04 ச.மீ :

II. (i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x10%

: (5710.00ச.மீ -754.04ச.மீ) x 10% =495.60ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு : 500.58ச.மீ (10.10%)

III. பொது உபயோகம்: (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

[A] LOCALBODY க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு = (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x 0.5% / 100

= (5710.0ச.மீ -754.04ச.மீ) X 0.5% = 24.78ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 44.67 ச.மீ (0.90%) :

[B] TANGEDCO/உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பரப்பு = (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x 0.5% / 100

= (5710.0ச.மீ -754.04ச.மீ) X 0.5% = 24.78ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 52.03 ச.மீ (1.04%) :

கட்டிட வரம்பு :

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ -ம் விட்டப்படல் வேண்டும்.

9.0மீ மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ -ம் விட்டப்படல் வேண்டும்.

மூலை முறிப்பு:-

12.0மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.5மீ X 1.5மீ விட்டப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:-

1. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.02.2020-ன் படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பொது உபயோகம் (A)-னை உள்ளாட்சிக்கும், மின்பகிர்மானம் (B)-னை TANGEDCO க்கு அல்லது உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
2. அரசாணை எண். 181 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020- மற்றும் அரசாணை எண். 141 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022 - ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், செயல் அலுவலர், ருத்ராவதி பேரூராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலொடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 0.6மீ X 1.2மீ என்ற குறைந்தபட்ச அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்படவேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

6.7.2024

செயல் அலுவலர்
ருத்ராவதி பேரூராட்சி,
குண்டடம்-638 702
திருப்பூர் மாவட்டம்

SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO.24

Document certified by Pushparaj B.
Signed by: Assistant Director
Date: 2023

வரைவாளர் நிலை III

கட்டட அளவை / திட்ட உதவியாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

our services doesn't just end there

Buying & Selling Services
Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services
Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals
Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services
Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services
Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate